பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் ஆயுட் கால கைதிகள் குறைபட்டுக்கொள்கிறார்கள், இது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசு ஏதேனும் ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice. A separate question may be put.

வெளி மாநில் கைதிகள்.

*405 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நமது மாநிலத்தின் உள்ள சிறைச்சாலைகளில் வைக்கப் பட்டுள்ள வெளி மாநிலத்தைச் சேர்ந்த கைதிகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்கள் எந்தெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(a) 26.

(b)

Andhra Pradesh	4
Kerala	3
Karnataka	3
Maharashtra	3
Madhya Pradesh	4
West Bengal	2
Pondicherry	7
	26

திரு. எஸ். கணேசன்: வேறு மாநிலங்களிலிருந்து இங்கேயுள்ள சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகள் இந்த மாநிலத்தில் குற்றம் புரிந்தவர்களா அல்லது அந்தந்த மாநில அரசுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த மாநிலத்தில் காவலில் வைக்கப்பட் டிருக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்காகும் செலவுகளை அந்தந்த மாநில அரசு ஈடுசெய்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Most of these prisoners are confined in the jails in the State for the offences committed inside the State. If their nativity—as the word used is nativity—place of birth is in the other State and if the offence is committed inside the State, they are confined in our State. If the other State Government is willing to take them, we are prepared to send them back. That is only on reciprocal basis, please remember.

MR. SPEAKER: Thiru Sivaswamy.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: On a point of further explanation to the supplementary question put by the Hon. Member Thiru Ganesan. Some years back you must have read in the newspapers there was one Sarala Sella *alias* Chandra —Car Mohini—she came from Karnataka. But the Car Mohini is confined in the jail in Tamil Nadu State because the offence was committed inside Tamil Nadu.

திரு. செ. சிவசாமி: அவசர நிலை காலத்தில் மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லா அவர்கள் நம் மாநிலத்தில் சிறைவைக்கப் பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் எந்தச் சிறையில் இருந் தார்கள், எவ்வளவு காலம் இருந்தார்கள், எவ்வளவு செலவாயிற்று என்று சொல்லப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice.

பம்புசெட்டுகளுக்குக் கடன் உதவி.

*406 வினா—திரு. ஏ. ஜெபமணி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கும் வரை அரசு கடன் வசூலை நிறுத்திவைக்க உத்தேசமுண்டா?

(ஆ) அந்த இடைக்காலத்துக்கு வட்டி இல்லாமல் வசூலிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு க. உரா. எட்மண்ட்: (அ) இல்லை. இருந்த போதிலும், மின் இணைப்புக் கிடைக்காத புதிய கிணறும் பம்பு செட்டும் சேர்ந்த அல்லது கிணற்றை ஆழப்படுத்தவும் பம்பு செட்டும் சேர்ந்த கடனுக்கு தவணையை செலுத்த கடன்